ஓம்

ஸ்ரீ கதிர்காமக்ஷேத்திர வரலாறுகளடங்கிய

# கதிரைமலைச் சிந்து!



பதிப்பாளர்: கா. பெரியசாமி பிள்ளை.

ஹிக்கொட — உந்துகொட.

16—7—79 விலை: 2—00

சுமன அச்சகம்—எட்டியாந்தோட்டை.

ஓம்

ஸ்ரீ கதிர்காம ஷேத்திர வரலாறுகளடங்கிய

# கதிரை மலைச் சிந்து!





ஆக்கியோன்: **வி. எஸ். கோவிந்தசாமி தேவர்**

## விநாயகர் துதி!

சீரானை, தென்கைலை ஊரானை, ஜெகம் போற்ற வந்தானை
செங்கமலக்கண்ணானை சிந்தைகவர்ந்தானை சிறப்புள்ளானை
வீரானை, போரானை, வினைதீர்ப்பானை, வெற்றியானை,
வெண்பட்டுடையானை, வீறுநடையானை வித்தையானை
கூரானைக் கொம்பானை, குவலயம் நிறைந்தானை
குறிக்கோளானை
குமரனுக்கு மூத்தானை கொஞ்சுதமிழ்தந்தானை
குறைதீர்ப்பானை
காரானை முகத்தானை கணையாழிக்கையானை கலிதீர்ப்பானை
கதிரைமலைச் சிந்துதனைக் கார்ப்போனே கணபதிநாள்
சரணம் காப்பு

## வனவேடனாக

வெள்ளிமலை யொத்த பல மேடை என்ற வர்ண மெட்டு

1. நாரதர் சொல் வாய் மொழியும் கேட்டு வேலன்
காதலுடன் ஆரவாரம் போட்டு அடடா
வள்ளி மேல் நினைவு வைத்து காட்டு வன
வேடனாக ரூபமாறி
மானைத் தேடி வாழ் கதிரை
கண்டார் காதல் கொண்டார்

2. வாரணியும் கொங்கை மட மானே அழகு
வானிலுயர் செங்கரும்புத் தேனே புள்ளி
மானைத் தேடி வந்தேனடி நானே இங்கு
வந்த மானை எங்கே சொல்லு
சிந்தை களி கூர்ந்து நில்லு
வள்ளி குறக் கள்ளி

# ஸ்ரீ கதிரை மலைச் சிந்து!

3. வாதாட வந்த வன வேடா உடன்
வந்த வழி பார்த்து வெளிப் போடா வீண்
மையல் கொள்ளலாகுமோ சொல் மூடா இதோ
வந்திடுவார் அண்ணன்மார்கள்
உன்னுயிர்க் களர்த்தமடா
ஓடு வனக் காடு

4. நீதி ஒழுங்கற்ற குறச்சாதி சற்று
நில்லடி சொல்யாருனக்கு நாதி அந்த
நேர்மை கெட்ட உங்களண்ணர் சேதி யிந்த
நீனிலத்தில் யானறிவேன்
வீணிலே பிதற்றாதடி
வீரி மாயக் காரி

5. ஏறுக்கு மாறாக நீ பேசாதே என்னை
ஈனக் குல மென்று இகழாதே நீயும்
எக்காளம் கொண்டு திரியாதே வேடா
இப்பதியை விட்டகல்வாய்
இப்பொழுதே செப்பி விட்டேன்
அறிவேன் கவண் எறிவேன்

6. வீராப்புப் பேசுகிறாய் வள்ளி லேசில்
விட்டுவிட மாட்டேனடி கள்ளி உந்தன்
மாங்கீற்றுக் கன்னமதை கிள்ளி கூடி
மருவி அணைந்து இன்ப
சுகத்தை தருவேனடி
மாதே யிப் போதே

7. வேடனொடு வள்ளி தர்க்க மாடி நிற்கும்
வேளையிலே வேடுவர்கள் ஓடி தங்கை
வீற்றிக்கும் நற்புனத்தைத் தேடி வெகு
வேகமுடன் தான் வரவே
வேலவனும் வேங்கை மரம்
ஆனார் காண்க லானார்

8. நின்ற வேங்கை மாமரத்தைக் கண்டு ஏதோ
நேருக்கு மாறாயிருக்கு தென்று ஒரு
நிமிஷத்தில் துணித்தெறிவோ மென்று வேடர்
நெஞ்சுருதி யோடு சென்று
அஞ்சிடாக் கோடாரி கொண்டு
நெருங்க மரம் குலுங்க

## ஸ்ரீ கதிரை மலைச் சிந்து!

9. நற்புனத்தில் தென்றல் வந்து வீச அங்கு
டக்கு டக்கெனக் கெவுளி பேச வேடர்
நல்மரத்தை வெட்டிடக் கைகூச இந்த
அற்புதத்தைக் கண்டறிவோம்
பொற்பதியில் நின்றிடட்டும்
வாரீர் களைப் பாரீர்

10. நங்கைய ரிருந்து விளையாட கந்த
சாமிக்கு நாம் நித்தம் பூசை போட முன்பு
செய்த வினை யாவும் பறந்தோட நம்
சத்தி வடிவேல் முருகன்
சித்த முண்டு அச்சமில்லை
ஜெயமே ஏன் பயமே

11. என்று சொல்லி வேடர் வனம் நாடி கரடி
ஏறு புலி மான் மரையைச் சாடி வேல்
ஈட்டி கொண்டு குத்தி விரைந் தோடி அங்கு
ஏழுமலை வாழ்கதிரை
சூழ்வனத்தில் வேடுவர்கள்
கூட வேட்டை யாட

12. ஆலோல மென்று குரல் காட்டி வள்ளி
அம்மை கவண் வீசிப் பட்சி ஓட்டி கதிரை
அம்பதியில் வாழ்ந்திடும் சீமாட்டி நல்
ஆரிழையர் ஏழு பேர்கள்
தோழியர்கள் காவலோடு
இருந்தே மன மகிழ்ந்தே

13. சிந்தைனில் கந்தனையே எண்ணி அழகு
தேமல் ஒளி வீச குறக் கன்னி உற்ற
சேடியவள் வந்து சடைப் பின்னி வள்ளி
சிற்றிடை துவழ அள்ளி
நெற்றியில் திரு வெண்ணீறு
அணிந்தாள் இதழ் கனிந்தாள்

14. அன்பர் தொழும் தென்கதிரை வேலா வாலை
அம்பிகை மஞைன்மணியாள் பாலா தேவ
யானை வள்ளி நாயகியாள் லோலா நின்
அன்பனும் கோவிந்தசாமி
அழகு தமிழ்க் கருள்வீர்
அய்யா முரு கைய்யா

# ஸ்ரீ கதிரை மலைச் சிந்து !

## வளையற் செட்டியாக

### ஆறுமுக வடிவேலவனே என்ற வர்ண மெட்டு

1. கற்பகச் சோலையில் வேங்கைமரமான
கந்தன் உருமாறி அங்கு
கம்பீரமான வளையற் செட்டியைப் போல்
காப்பு விலை கூறி

2. அற்புதமான மணி வளையல் கொண்டு
ஆனந்தமாய் நடந்தே; வெகு
ஆனை புலிகள் கரடிகள் சூழ்ந்திடும்
அவ்வலமும் கடந்தே

3. தினைப்புனச் சுந்தரி வள்ளி அழகுக்கு
செட்டியார் ஆனாரே வேலன்
தீராத மோக வெறியுடனப்பரண்
தேடியும் போனாரே

4. வனக் குறமாமகள் தினைப்புனங் கார்த்திடும்
வண்ணப் பரணருகே மணி
வளையல் வளையல் வளையலெனச் செட்டி
வந்தார் புனத்தருகே

5. வளையற் செட்டியாரே வாருமெனக் குற
வள்ளியழைத்திடவே; நன்கு
வாய்த்த பரண்மிசை ஏறிக் குமரனும்
உள்ளம் குளிர்ந்திடவே

6. களைப்பாயிருக்குது வள்ளி நாயகமே
கஞ்சி கொடுப்பாயோ நானும்
கதிரைமலைக்கேகும் ஒற்றடிப் பாதையை
காட்டிக் கொடுக்காயோ

7. தேனுண்டு செந்தினை மாவுண்டு இளைப்பாறி
செல்லும் செட்டியாரே அதி
சீக்கிரமாகவே வளையல் விலைதனைச்
சொல்லும் செட்டியாரே

8. பச்சை வளையல்கள் மிச்சம் பதினாறு
லட்சம் விலை தானே; அசல்
பவள வளையல்கள் பன்னிரு ஜோடுகள்
நூறு லட்சம் மானே

9. ஏறுக்கு மாறாகப் பேசி விலை கூறும்
எந்தவூர் செட்டியாரே உமது
ஊரென்ன பேரென்ன நீரென்னை ஏய்த்திட
இயலுமோ செட்டியாரே

# ஸ்ரீ கதிரை மலைச் சிந்து

10. பாருக்குள்ளே உயர் பைந்தமிழ் நாடு சேர்
பழனி எந்தன் ஊரு தாய்
பார்பதி; தந்தை சிவலிங்கமே; மாமன்
மாயன் செட்டியாரு

11. அண்ணன் கணபதி செட்டியாரென் பெயர்
ஆறுமுகம் மானே உன்
அங்கையில் கங்கணம் சூட்டுவேன் வாசும்மா
ஆனந்தமாய்த் தானே

12. அண்ணன்மார் வந்திடும் நேரமல்லோ வீணாய்
ஆவியைப் போக்காதே நீயும்
அப்படி இப்படிப் பேசிப் பிதற்றி நீ
ஆபத்தில் சிக்காதே

13. செப்படி வித்தையோ காட்டுறாய் வள்ளியுன்
சேதி தெரியாதோ பெரிய
செல்வக் குபேரன் மகளெனப் பேசுறாய்
சீமை யறியாதோ

14. வளையலைத் தோளிட்டு பிழைக்க வந்த செட்டி
வம்புகள் பேசாதே உடன்
வந்த வழி கூடி உந்தனூர் ஏகிடுன்
டம்பமும் செல்லாதே

15. கார்த்திருந்தவுன்னை சேர்த்துப்பிணைத்துயான்
கட்டியணைப்பேண்டி வள்ளி
காமன் கணையென்னை மார்பைப் பிளக்குது
தொட்டு ரசிப்பேண்டி

16. வார்த்தை மெத்தப் பேசும் மட்டி நீயெனக்கு
மாமி மகன் நீயோ வீண்
மையல் கொண்டு சும்மா வாயை நீ சப்புறாய்
மாமன் மகன் நீயோ

17. காரசாரமாகப் பேசிட வேலவன்
காதல் தடையுறவே அங்கு
பாராமுகமாக ஏழுபேர் தோழியர்
பாயில் துயிலுறவே

18. வளையலைத் தூக்கியே வந்த வழி கூடி
மாயமாக மறைந்தே வன
வேடுவர் ஏழுபேர் வந்திடும் நல்வழி
மார்க்க மதை யறிந்தே

# ஸ்ரீ கதிரை மலைச் சிந்து!

19. தள்ளாடும் கூனக் கிழவனைப் போலவேல்
சாமியும் நின்றுரே ஓம்
சரவண பவ குக சண்முகா வென
வேடர் முன் சென்றுரே

20. குங்குமப் பொட்டுக்கும் கூந்தலழுகுக்கும்
கொஞ்ச நடந்தாரே அன்பன்
கோவிந்தசாமி சொல் நற்றமிழ் ஓங்கிட
நித்தம் மகிழ்ந்தாரே

## விருத்தனுக

### மாவட்டச் சோலையிலே என்ற வர்ண மெட்டு.

1. மாணிக்கப் பாறையிலே வேடுவர்கள்
வாரவழியினிலே
கூனக் கிழவனைப் போல் வேல் முருகன்
கால் கை நடு நடுங்கி

2. கூனிக்கிடப்பதனைக் கண்டார்கள்
குன்றுக் குறவரெல்லாம்
ஏனிந்தப் பாதை வழி தாத்தா நீர்
எங்கு தான் போரீரோ

3. காசி ராமேஸ்வரமே தீர்த்தம் பல
கண்டு தலை முழுகி
வாசக் கதிரைமலை மாணிக்க
கங்கையில் நீராட

4. பாதை வழி நடந்தே கதிர்காமப்
பதிக்கி யான் போரேன்
வேதைப் படுத்தாதீர் தம்பிகாள்
வீட்டுக்குடன் போங்கோ

5. ஆனை புலி கரடி இவ்வனத்தில்
ஆபத்து மெத்தவுண்டு
சேனை யெமக்கு முண்டு பரனுண்டு
தங்கும் விடுதியுண்டு

6. கந்தன் கருணையுண்டு ஏழு பேர்
கன்னியர் காவலுண்டு
செந்தினை மாவுமுண்டு தேனுண்டு
செல்லும் பெரியவரே

# ஸ்ரீ கதிரை மலைச் சிந்து!

7. நானோ பெருங் கிழவன்
நடக்க முடியாது
ஏனோ வருத்துகிறீர்
எப்படி யான் வருவேன்

8. பேணிச் சுமந்தார்கள்
போட்டு நடந்தார்கள்
மாணிக்கக் கங்கையிலே
வந்தார் புனத்தருகே

9. தங்கையே வள்ளியம்மா
தாத்தா வுன் பாரமம்மா
சிங்காரச் சேடிகளே
சீக்கிரம் யாம் வருவோம்

10. பண்புள்ள வள்ளியம்மா
போத்தியிரு மெனவே
ஜம்மென் றிருந்தாராம்
தகப்பன் குருசாமி

11. பண்டாரப் போத்தியென
கிண்டல்கள் பேசாதே
அண்டையில் நீ வரவே
ஆனந்தம் பொங்குதடி

12. தாடி வளர்த்தவரே
சந்நியாசி யானவரே
கோடி சரணமய்யா
குறும்புகள் பேசாதீர்

13. தாடி வளர்த்தாலும்
சந்நியாசி யானாலும்
கூடி மருவிடவோ
குறைச்சலில்லையடி

14. மங்கையே வள்ளியம்மா
மயக்கமாகுதடி
இங்கிர்தமான பெண்ணே
என் பசி தீராயோ

15. தேனும் தினை மாவும்
தேக்கிலையில் கொடுக்க
மோனக் குருசாமி
மூச்சுத் திணறிடவே

எந்தனுக்கு
தம்பி தம்பி
கைலாகு
நீராட்டி
பண்டாரத்
கவனம்
பண்டாரப்
பரண்மிசை
பேத்தி நீ
உள்ளூர
மா பெரிய
கிழட்டுக்
குடு குடு
எதுவிதக்
ஒரு வித
முன்பு வந்து
பிசைந்தல்லோ
வாங்கியுண்டு

# ஸ்ரீ கதிரை மலைச் சிந்து!

16. கண்கள் சுழன்றிடவே — பரண்மிசை
கால் கை படபடத்து
தண்ணீந் தவிக்குதடி — பேத்தி யெந்தன்
தாகம் தவிர்ப்பாயோ

17. அய்யோ திருவுளமே — சுப்பையா
அண்ணர்கள் இங்கிலையே
வையாபுரித் துரையே — அரோகரா
வந்தெனைக் காருமென்றே

18. கையைப் பிடித்தேகி — இருவரும்
கங்கைக்குச் செல்லயிலே
மொய்குழல் ரஞ்சிதமே — எனக்கொரு
முத்தம் நீ தாராயோ

19. பித்துப் பிடித்ததுவோ — கஞ்சா அபின்
போதை வெறியுனக்கே
புத்தியுனக்கு மில்லை — மிகப் பெரும்
போக்கிரி நீயல்லவோ

20. பாவி குறச் சிறுமி — உன்னாலே
பட்டேன் பெரும் பாடு
நாவி கலந்தாயோ — பாதகியென்
நாவும் வரளுதடி

21. காட்டில் கிடந்தவனை — அண்ணன்மார்
கண்டுடன் தூக்கி வந்து
காட்டிக் கொடுத்தாரே — கதிர்காம
கந்தா வுனக்கபயம்

22. கங்கை தனிலிறங்கி — பண்டாரக்
கந்தன் தாகம் தீர்க்க
மக்கையாம் வள்ளியம்மாள் — செங்கரத்தால்
வாரி நீர் தந்தாளே

23. தாகம் தவிர்த்தாயடி — பேத்தியெந்தன்
மோகம் தணியலையே
தங்கியிருந்திடுவோம் — மாணிக்கக்
கங்கைக் கரையினிலே

24. விருத்தக் கிழவா நீ — கங்கை விட்டு
வெளியேற மாட்டாயோ
கிருக்குப் பிடித்தவனே — வாவெனவே
கையைப் பிடித்திழுத்தாள்

# ஸ்ரீ கதிரை மலைச் சிந்து!

25. பற்றியிழுத்தாரே வேல் முருகன்
பைங்கிளியாள் கரத்தை
சிற்றிடை தான் துவழ கங்கையிலே
சேல்விழியாள் குதித்தே

26. கட்டிப் புரண்டெழுந்து மாணிக்கக்
கங்கைக் கரையேறி
மட்டற்ற கோபமொடு ஒதுங்கிய
மாராப்புச் சேலை கட்டி

27. கொடிய மிருகமுண்டு இவ்வனத்தில்
கொம்பானை மிச்சமுண்டு
சடுதியில் வா கிழவா உனக்கிந்த
சாதனை யாகாது

28. நெடிய வனத்தூடே அண்ணா நீர்
நேராக முன் தோன்றி
நொடியில் வருகவென தம்பி மதி
நுட்பமதைத் தெரிந்தே

29. விண்ணுலகம் நடுங்க மாமலைசன்
வனங்கள் கிடுகிடுங்க
மண்ணுலகம் அதிர வள்ளி முன்
வந்தது கொம்பானை

30. ஆனை வருகுதென்று வள்ளியம்மன்
அங்கம் பதைபதைத்து
ஆவி படபடெத்து மூர்ச்சித்து
அதிர்ச்சியுற்றாளே

31. வெற்றி மயிலேறும் சுப்பையா
மெல்லி நிலையருந்தே
கட்டி அரவணைத்து களி கூர்ந்து
காட்சி கொடுத்தாரே

32. கண்ணைத் திறந்தாளாம் வள்ளி யிரு
கண்களில் நீர் ததும்ப
கந்தனைக் கண்டாளே மட்டற்ற
காதலும் கொண்டாளே

33. கடந்த கதை பேசி யிருவரும்
கான மயிலேறி
நடந்த கதை பேசி நாடினார்
கூடினார் வள்ளிமலை

## ஸ்ரீ கதிரை மலைச் சிந்து!

**34.** எங்கும் குதூகலமே கந்தன் வள்ளி
தங்கும் மலை வளமே
கங்குல் பகலாக நவரத்ன
கற்கள் ஒளி வீச

**35.** மாதவத்தோர் புகழும் கதிர்காம
மாமலை மீதேறி
நாதத்தொனி முழங்க மயில் நின்று
நாட்டியமாடுது பார்

**36.** பொங்குது மங்களமே வானோர்கள்
பூமலர் பெய்தனரே
சங்குகள் தான் முழங்க கோவிந்த
சாமி தமிழ் விளங்க

## வேடர்கள் வள்ளியைத் தேடுதல்.

### கந்தன் வள்ளி காட்சி - கும்மி வர்ண மெட்டு.

**1.** சிங்காரத் தோப்பிலே வேட்டையாடி — வேடர்
சிங்கமெனப் பரண் வந்து நின்றே
தங்கை வள்ளியெங்கே சந்நியாசியுமெங்கே
சார்ந்தனர் சொல்லுங்க சொல்லுங்கடி

**2.** தங்க மயில் வள்ளி நாயகியாள் — வந்த
தாத்தாவின் தாகம் தணிப்பதற்கே
கங்கைக்கு சென்றூர்க ளிவ்வழியே என்ன
காரணம் நேர்ந்ததோ யாமறியோம்

**3.** மங்கை காள் ஏழு பேர் சேடிகளே — நீங்கள்
வாழ்ந்திடும் சேரிக்குப் போங்களடி
சிங்கத்தைப் போலவே சீறியே வேடர்கள்
சேல்விழி வள்ளியைக் காணுமல்

**4.** ஆராத துக்கம் பெரிதாகி — வேடர்
அந்த வனமெங்கும் தான் தேடி
தீராத சோகமுடனேடி வள்ளி
சிற்றடி தேடி நடந்தார்கள்

**5.** தங்கையரே வள்ளி நாயகமே — எங்கு
சார்ந்தனையோ கைகால் சோர்ந்தனையோ
கங்கையில் வீழ்ந்து மடிந்தனையோ தாயே
காண்பதினியுனை எக்காலம்

# ஸ்ரீ கதிரை மலைச் சிந்து

6. கொம்பானை கையினில் சிக்கினளோ — தங்கை
கோவென் றலறிப் புலம்பினளோ
அம்புவி மாதே அருளாயோ வள்ளி
அம்மனை யிவ்வழி கண்டீரோ

7. ஆற்று மணலில் புரண்டுருண்டு — வேடர்
அழுது புலம்பிப் பரதவித்து
தேற்றுவாராரும் ஒருவறின்றி எங்கும்
தேடியும் வள்ளியைக் காணுமல்

8. அய்யா திருச்செந்தூர் வாழ்குமரா — எங்கள்
ஆறுமுக வடிவேலவனே
மெய்யனே துய்யனே பன்னிரு கைய்யனே
மெல்லி வள்ளியினைக் காணீரோ

9. சேரும் இடந்தனில் சேர்ந்து விட்டாள் — உங்கள்
செல்வத் தங்கை வள்ளி மாமயிலாள்
சீரும் சிறப்புடனிப்பதியில் வெகு
சேமமுடன் நன்கு வாழுகிருள்

10 வள்ளி மலைக்கு விரைந்தோடி — இதோ
வந்துடன் பாருங்கள் என்று சொல்லி
தெள்ளறச் சொன்ன அசரீரி கேட்டு
திடுக்கிட்டெழுந்துடன் வேடுவர்கள்

11. துள்ளியெழுந்து நடந்தோடி — வேடர்
சூட்சமுடன் வழிதாம் கடந்தே
வள்ளி மலையை வளைந்தார்கள் வடி
வேலனுடன் வேடர் போர் தொடுத்தார்

12. முச்சானை வைத்திட்ட வேலெறிந்து — வேலன்
முன்பு குதித்தாரே வேடுவர்கள்
துச்சமெனப் பாய்ந்து போர் தொடுத்தாரப்பன்
சுப்பையா வென்று அறியாமல்

13. சக்திமிகும் வடிவேல் தாங்கி — நின்ற
சண்முகநாதன் கொடியுயரக்
கொக்கரக் கோவெனச் சேவலும் கூவிட
குறவர்கள் அட்சணமே மடிந்தார்

14. மாண்டதோர் அண்ணர்கள் மீண்டும் உயிர் பெற
வள்ளியம்மன் வரம் தான் கேட்க
ஈண்டும் வடிவேலன் நல்லருள் ஓங்கிட
ஏக வரத்தை உவந்தளித்தார்

15. கள்ளம் கபடற்ற அண்ணர்களே என்னை
கண்ணிமை போல் நிதம் காத்தவரே
வள்ளி அழைக்கிறேன் நித்திரையோ உடன்
வாருங்க ளண்ணு வெனவுரைத்தாள்

# ஸ்ரீ கதிரை மலைச் சிந்து!

16. தங்கை அழைத்ததும் சிங்க மறவர்கள்
சண்முக நாதனடி தொழுதே
மங்காப் புகழுடன் நின்றூர்கள் வேடர்
மட்டற்ற ஆனந்தம் கொண்டார்கள்

17. மாணிக்கக் கங்கையில் நீராடி – ஜெய
மங்கள வாழ்த்து மிகப் பாடி
காணிக் குறவர்கள் வேடுவச்சி மின்ஞர்
கற்பூர தீபம் கரமேந்தி

18. தேஞல் ஆராதனை செய்தார்கள் – அட்ட
திக்குகளெங்கும் இசையொலிக்க
பாலால் ஆராதனை செய்தார்களய்யன்
பன்னிரு கண்கள் களித்திடவே

19. ஆலாத்தி சுற்றியெடுத்தார்கள் – வள்ளி
அம்மன் கண்டுள்ளம் குளிர்ந்திடவே
கோலாகலமுடன் வேடுவச்சிங்கிகள்
கூடிக் குலவையு மிட்டார்கள்

20. நாட்டியமாடி நடமாடித் – தூய
நற்றமிழ்க் கும்மி யிசை பாடி
மாட்சிமிகும் வடிவேலருக்குத் திரு
மணி விளக்கேற்றி மனம் குளிர்ந்தே

21. பூரண கும்ப கலசம் வைத்து – வண்ணப்
பூவாலே பந்தல் அலங்கரித்து
வாரண முகத்தோன் தம்பியற்குத் தேன்
மாவிளக்கேற்றி மகிழ்ந்தார்கள்

22. வேடுவர் பூஜை புரிந்தார்கள் – எங்கும்
விண்ணவர் பூமாரி பெய்தார்கள்
ஆடுமயின் மிசை வேலனெடு வள்ளி
அம்மனும் காட்சி கொடுத்தேகி

23. அத்தர் புனுகு சவ்வாது மணம் – கமழ்
ஆலயமெங்கும் பரிமளிக்க
சித்தர் முனிவர் கணங்கள் தொழுதிட
சிங்காசனத்தினில் வீற்றிருந்தார்

24. இந்த விதமாக தங்கிருக்க – பழனிக்
கேகினர் நாரத மாமுனியும்
சிந்து வண்ணமாகக் கோவிந்தசாமியும்
செந்தமிழாலிசை பாடிவைத்தான்

# ஸ்ரீ கதிரை மலைச் சிந்து!

## நாரதர் பழனிக்கு தூது சென்றது.

### அருள் பொழியும் ஸ்ரீ கதிரை என்ற வர்ண மெட்டு

மாட்சிமிகும் பழனிமலை மாமுனியும் சென்று
மதிதேவ குஞ்சரிமுன் மன மகிழ்ந்து நின்று

காட்சி தரும் கதிரைமலை சென்றிருந்தேன் நானே
கந்தன் திருவிளையாட்டைக் கண்டுடன் வந்தேனே

அண்டம் புகழ் நாரதரின் அடிவணங்கி நின்று
அவனி மெச்சும் மாமுனியே அமர்ந்தருளும் என்றார்

கண்டு வந்த சேதி பல கேட்டருள்வாய் நீயே
கலியுகத்தின் தவமணி நீ தெய்வானைத் தாயே

வனக்குறத்தி வள்ளியொடு வேலவனும் கூடி
வாழ்கதிரை மாமலையில் மகிழ்ந்து உறவாடி

கணப் பொழுதும் அவளை விட்டுப் பிரிய மனமின்றி
கன்னி அவள் ஆசையினால் உன் நினைப்புமின்றி

வைப்பாட்டி அவளழகை மறக்கவே மாட்டான்
வாழ்பழனிப் பதிமேவி வரவுமினிமாட்டான்

செப்பறிய அப்பதிபோல் இப்புவியில் இல்லை
சேதி பலமிகச் சொல்வேன் வெகு நேரமில்லை

கண்டறிந்து கொள்ளும் நான் போய் வாரேனென்று
கலகபுரி நாரதரும் ககனமதில் சென்றார்

நெஞ்சம் கொதித்து மனம் நொந்து தெய்வானை
நிமிஷத்தில் வேலவனை கூட்டி வருவேனே

வண்டார் கடம்பணி தோள் முருகனையும் கூட்டி
வரும் போது மாணிக்கக் கங்கையில் நீராட்டி

குறநாற்றம் வீசாது தேய்த்துக் குளிப்பாட்டி
குமரகுரு தேசிகனைக் கையோடு கூட்டி

வரவேணும் மாணிக்க வாசகனே யென்று
வாழ் பழனி மலையேறி வீரமுடன் நின்று

மார்ராப்புச் சேலைதனை வரிந்திருக்கிக் கட்டி
மதிப்பிலுயர் நவரத்தின பசும் தங்கக் கட்டி

கூரான குறச்சிறுக்கி கொடுத்த மையுண்டு
கூத்தியாளோடிருந்து குலவுவதைக் கண்டு

## ஸ்ரீ கதிரை மலைச் சிந்து!

குறத்தியொடு முறங்கட்டிப் பிழைக்க விதியாச்சோ
குமரனுக்குமிச் சேதி தெரியாமல் போச்சோ
மறத்தியென்னை மணம் புரிந்த கதையும் கனவாச்சோ
வனக்குறச் சிருக்கியவள் கனவும் நனவாச்சோ
காட்டெருமை பன்றி முயல் பூனைகளைக் கொன்று
கலைகளொடு மான் மரை கறி சமைத்துத் தின்று
உண்டு கொழுத்த ஒழுங்கற்ற குறச்சிருக்கி
உயர்வான எனக்கவளோ கிடைத்தாள் சக்களத்தி
குன்றேறி நின்றல்லோ குமுறி நின்ருளே
கோலமென்ன கோலமெனக் கொதித்து நின்ருளே
அன்னையே ! தவத்தோர்கள் அவதியுறவாகும்
அப்பதிக்கு நீரேக இப்பதியென்னுகும்
உன்னையே நம்பினேர்க் குதவுபவள் நீயே
உன் கோபம் பொல்லாது நான் போறேன் தாயே
சென்று யான் முருகனுடன் சேதியினைச் சொல்லி
சீக்கிரம் கூட்டி வரத் திருவருள் வீரம்மே
என்று யிருகரங்கூப்பி இணையடியைப் போற்றி
நின்ருரே மாணிக்க வாசன் மலர் சாற்றி
பொங்கிடப் பேரின்பக் கடல் அலைகள் மோத
புகன றனள் தெய்வானை புனிதவதியப்போ
அப்பதியில் போயிருந்து யிப்பதியை நோக்கி
அறுகோண அட்சரத்தை வரைந்து உருவாக்கி
பொற்பதியில் சண்முக சடாக்ஷரத்தைப் போட்டு
பொன்னுன ஐம்புலனை அடக்கி அருள் கூட்டு
அட்சணமே முருகனுன் கண்முன்னே தோன்றி
ஆடிவரும் வேலவனை அன்புருகக் கூட்டி
இட்சணமே கூட்டி வரவேணுமெனச் சொல்லி
ஏக வரங் கொடுத்தாளே பழனிமலைச் செல்லி
ஆணிப் பொன் கோபுரத்துள் அப்பொழுதே யேகி
அத்திமுகன் திருப்பாதம் வணங்கிச் சிவயோகி
மாணிக்கவாசகனும் வருகிறு ரெங்கே
மஞ்சு தவழ் கதிர்காம மாமலைக்கிங்கே
தெய்வானை திருவருளின் சொற்படிக்கிருந்து
ஜெபித்தனன் கதிரை மலைப்பதிதனிலிருந்தே

# ஸ்ரீ கதிரை மலைச் சிந்து

### தெய்வானையம்மன் சொற்படி ஸ்ரீ மாணிக்கச்சித்தர் முருகனை அன்புருக அழைத்தது.

## கந்தர் அகவல்.

ஓம் சரஹண பவ குகனே முருகா
உமையவள் அருந்தவ மகனே வருக

கலியுக வரதா கந்தா முருகா
கங்கா தரனருள் மைந்தா வருக

திருமால் மருகா செல்வேள் முருகா
திருமயிலேறிச் சீக்கிரம் வருக

குஞ்சர முகத்தோற் கிளையோய் முருகா
குன்று தோறாடிடும் குமரா வருக

மறமகளோடு மருவிடும் முருகா
மரகத வடிவேலழகா வருக

குறமகளோடு கொஞ்சிடும் முருகா
குக்குடக் கொடிக்கதிகாரா வருக

அமரர்கள் சேனாதிபதியே முருகா
அசுரப் படைகளை அழித்தோய் வருக

ஆறுபடை வீட்டுக்கதிபா முருகா
அழகொளிர் வீசிட அய்யா வருக

ஆறுமுகத்துடன் அழகா முருகா
அன்பர்க்கருளிய குளகா வருக

பன்னிரு கரம் தோள் இலங்கிட முருகா
பன்னிரு கண்கள் துலங்கிட வருக

அரஹர அரஹர அரஹர முருகா
சரஹண பவகுக சண்முகா வருக

திருச்செந்தூர் வளர் செல்வா முருகா
திருப்பரங் குன்றத் தேவா வருக

திருவாவினன் குடிக்கரசே முருகா
திருத்தணி மலைக்கதிபதியே வருச

அழகர் மலைக் கதிகாரா முருகா
அருள் வளர் சோலைக் குமரா வருக

பழனிமலைக் குருபரனே முருகா
பம்பரம் போற் சுழல் மயின் மிசை வருக

கழுகுமலைப் பதிமெய்யா முருகா
கதிர்காமத் துரை அய்யா வருக

# ஸ்ரீ கதிரை மலைச் சிந்து!

| | |
|---|---|
| வடிவேல் தாங்கி மயின்மிசை | முருகா |
| வனக் குறமகளுடன் மகிழ்ந்துடன் | வருக |
| வேல் வேல் வேல் வேல் வேல் வேல் | முருகா |
| வெற்றி மயிலேறி விரைந்துடன் | வருக |
| தக தக தகவென மயின்மிசை | முருகா |
| தைத்ததிங்கிணத்தக தகவென | வருக |
| டகுடகுடகுடகு டங்கென | முருகா |
| டிகுடிகுடிகுடிகு டிங்கென | வருக |
| ஓம்ஓம்ஓம்ஓம்ஓம்ஓம் | முருகா |
| உளம் மகிழ்ந்தென் முன் சடுதியில் | வருக |
| வருக வருக வருக | முருகா |
| முருகா முருகா முருகா | வருக |



ஓம் கணபதி ஓம்

**ஸ்ரீ மாணிக்கவாசக சுவாமி சமாதி கொண்டது.**

## லாவணித் திருப்புகழ்.

1\. கருணை மழை பொழியும் கற்பகப் பூச்சொரியும்
கதிர்காமத் துறை வடிவேலனைத் தேடியே—பக்தன்
கனிவோடு லாவணித் திருப்புகழ் பாடியே—ஓம்
  கந்தா முருகா அரோஹராவென
  கலியுக வரதா வந்தருள் தாவென
கான மயில் ததிங்கிணத்தாவென ஆடவே—செய்த
கன்ம வினை முற்றும் பறந்தோடவே

2\. வள்ளிமலை கடந்து மாணிக்கக் கங்கை கண்டு
வாழ்கதிரைச் சேத்திரத்தே வந்தாரே—வேலன்
வள்ளியுடன் நேரில் காட்சி தந்தாரே—யிங்கு
  வந்ததுயாரென உனக்குத் தெரியுமா
  மகிமையை விளக்கி யான் சொல்லப் புரியுமா
முந்தானையை ஏந்தி முன்னே செல்லடிஅழகு
முருகனைத் தாவென மன்றுடி நில்லடி

# ஸ்ரீ கதிரை மலைச் சிந்து!

3. அறுகோண அட்சரத்துள் ஆறுமுகம் பன்னிருகை
அழகே உருவெடுத்து நின்றாரே — சித்தன்
ஆடிவந்த வேலவனைக் கண்டாரே — வள்ளி
அழகொளிர் சேமல்கள் பளீர் பளீரென
அற்புதச் சதங்கைகள் சலீர் சலீரென
ஆனந்த நடனமுடன் வரக் காணவே — முன்பு
அருள் ஞான சோதியாகத் தோணவே

4. வாசியடக்கித் தவ யோகம் புரியும் சித்தன்
வள்ளி சுய வடிவைப் பார்த்தாரே — அருள்
மாதவத்தோன் பொன்னுடலம் வேர்த்தாரே தாயே
வரமருள் சுந்தரி மலரடி பணிந்தேன்
சிரம் குவித்துந்தன் திருவடி தொழுதேன்
வாழ் பழனிக்கேக மாட்டேன் அன்னையே கதிரை
மாமலையில் ஏற்றருளும் என்னையே

5. ஐந்தெழுத்தை ஒன்றாக்கி அடக்கச் சுடரெழுந்து
அருட்பெருஞ் சோதியாக வளர்ந்துதே—எங்கோன்
ஐந்து கரத்தோனுடன் இரண்டறக் கலந்துதே—ஓம்
அர ஹர அர ஹர அரோ ஹராவென
அடியவற்கருளிய குருபராவென
அந்நரத்தில் வானவர் பூமலர் சொரிந்தார்கள் இந்த
அவனி பூலோக மக்கள் அறிந்தார்கள்

6. செல்லக் கதிர்காமத்திலே சித்தன் சமாதி கொண்டு
ஜெகஜோதியாக நின்று ஜொலிக்கவே — தூய
சித்துதனை பக்தர் கண்டு களிக்கவே காட்டு
தினைப்புன வேடர்கள் திருவிழாக் கண்டு
சித்தி விநாயகர் நல்லருள் கொண்டு
சிங்கார வள்ளியின் காந்தனைப் பாடியே — தங்கச்
சேவடி போற்றிக் காவடி தூக்கி ஆடியே

7. ஆணிப்பொன்னம்பலவன் பேணித் தலை முழுகும்
மாணிக்கக் கங்கையில் நீராடியே — பக்தர்
மாதவத்தோர் எத்தனையோ கோடியே — ஜெய
மங்களம் பாடியே மகிபனைத் தேடியே
மலரடி நாடியே திருவருள் கூடியே
மகிழ்ந்து நடந்து வரும் காட்சியே கதிரை
மாமலையின் மாண்புமிகும் மாட்சியே

## ஸ்ரீ கதிரை மலைச் சிந்து!

8. தென்கதிரையம்பதியிற் சிந்தாமணி மண்டபத்தில்
தேவி வள்ளியோடு கந்தன் வாசமே —வர்ண
திரை மறைவில் வீற்றிருந்தார் நேசமே —பக்தி
சித்தி முக்தி தவமுத்துலிங்கேசன்
சிவன் வலுவோங்கிய கல்யாண நாதன்
தெய்வானை லோலனைக் கூட்டிச் செல்லவே—வந்த
சித்தனின் அற்புத மகிமையை நற்றமிழ் சொல்லவே

9. தீராப் பிணியகற்றும் தீவினையை வேரருக்கும்
மாறாத்துயர்கள் தீர்க்கும் வைத்தியன் —புள்ளி
மாமயிலில் ஏறிவரும் மகத்துவன் —உலகில்
மலடர்கள் வளம்பெறக் குருடர்கள் விழியுற
செவிடர்கள் இசை பெற முடவர்கள் நடம்பெற
மால்மருகன் தந்த வரப் பிரசாதமே முருகன்
மகிமை பெற்ற கோவிந்தசாமியின் கீதமே

## ஸ்ரீ முத்துலிங்க சுவாமி கதிர்காமம் வந்தது.

**கண்டோம் கண்டோமே என்ற வர்ண மெட்டு.**

பக்தனும் வந்தாரே — முத்துலிங்கச்
சித்தனும் வந்தாரே

1. அத்திமுகத்தோன் திருவடி போற்றியே
ஆதியுமையவள் பாகனைப் போற்றியே
சத்துரு சங்கார வேலனைப் போற்றியே
சற்குரு மாலயன் சேவடி போற்றியே [பக்]

2. தெய்வானையம்மனின் சீரடி போற்றியே
தெண்டம் சமர்ப்பித்துப் பூமலர் சாற்றியே
வையாபுரித்துரை ஐயனைக் கூட்டியே
வாழ்பழனிக்கேக வாழுங் கதிர்மலை [பக்]

3. அண்டம் புகழ்மிகும் வள்ளியம்மன் மலை
அன்பர்க் கருளிய தென் கதிரை மலை
எண்டிசையோர் புகழ்ந் தேற்றிய மாமலை
எங்கோன் உறைந்திட்ட ஏழுமலைப் பதி [பக்]

## ஸ்ரீ கதிரை மலைச் சிந்து!

4. காட்டானை சிங்கம் கரடி புலி மிகும்
கலைகளோடு புள்ளி மான்கள் மருவிடும்
கூட்டமாய் வானரம் மந்திகள் தாவிடும்
குயில்கள் இசை பாட மயில்கள் ஆடும் மலை [பக்]

5. துஷ்ட மிருகங்கள் தூர ஒதுங்கிடும்
துன்பம் வல்வினை நோய் காதம் விலகிடும்
அஷ்ட திசை வளர் மெய்ஞ்ஞான பண்டிதன்
ஆனந்தத் தாண்டவ மாடிடும் மலை [பக்]

6. முன் செய்த தீவினை முற்றும் விலகிட
மூதறிவாளர்கள் சாதனை செய்திடும்
கன்மவினை பல காதம் பறந்திடும்
கந்தன் வள்ளி திருக்காட்சி தரும் மலை (பக்]

7. மாணிக்கவாசன் சமாதியினைக் கண்டு
மாதவத்தோன் அருள் ஆனந்தம் மேற்கொண்டு
மாணிக்கக் கங்கையில் நீராடிச் சென்று
மாமறையோர் துதித்தேற்றிடும் க்ஷேத்திரம் [பக்[

8. காவியுடையுடன் மேவியோர் மலையில்
கந்தனுடன் வள்ளியம்மன் அருகினில்
கோவிந்தசாமியின் இன்பத் தமிழிலே
குதூகலங் கொண்டவர் குவலயம் வாழவே [பக்]

## ஓம் சடாட்சரமணி மாலை.

ஓம் ஓம் ஓம் முருகா ஓம் முருகா ஓம்
ஓம் முருகா ஓம் முருகா ஓம் முருகா ஓம்

**அனுபல்லவி**

| | |
|---|---|
| 1. கணபதியே யென் குருவே | ஓம் முருகா ஓம் |
| கனவிலுனை நான் மறவேன் | வா முருகா வா |
| குணபதியே அறுமுகனே | ஓம் முருகா ஓம் |
| கொண்டல் வண்ணன் மருகோனே | வா முருகா வா |
| 2. கதிரை மலை வாழ்குகனே | ஓம் முருகா ஓம் |
| கலியுகத்தின் தவமணியே | வா முருகா வா |
| மதியணிந்தோன் திருமகனே | ஓம் முருகா ஓம் |
| மயிலேறும் மாணிக்கமே | வா முருகா வா |
| 3. பார்வதியாள் பாலகனே | ஓம் முருகா ஓம் |
| பன்னிரு கை வேலவனே | வா முருகா வா |
| ஆர்வமுடன் யான் பாட | ஓம் முருகா! ஓம் |
| அருள் எனக்கு தந்தருள | வா முருகா வா |

## ஸ்ரீ கதிரை மலைச் சிந்து!

4. திருமறவன் மருகமனே — ஓம் முருகா ஓம்
தெய்வானை நாயகனே — வா முருகா வா
வனக்குறவன் மருகோனே — ஓம் முருகா ஓம்
வள்ளியம்மை மோகனனே — வா முருகா வா

5. பரம் பொருளே குருபரனே — ஓம் முருகா ஓம்
பஞ்சாட்சரத்துட் பொருளே — வா முருகா வா
கரம் குவித்தேன் கதிர்காமா — ஓம் முருகா ஓம்
கார்ப்பதும் நின்பாரமய்யா — வா முருகா வா

6. சரவண ஓம் பவகுக ஓம் — ஓம் முருகா ஓம்
சண்முக ஓம் சடாட்சர ஓம் — வா முருகா வா
அரஹர ஓம் அரஹர ஓம் — ஓம் முருகா ஓம்
அண்டர் தொழும் நாயகமே — வா முருகா வா

7. தேடறிய தவமணியாள் — ஓம் முருகா ஓம்
தெய்வானை தேடுகிறாள் — வா முருகா வா
நாடறியும் உன் புதுமை — ஓம் முருகா ஓம்
நாடி வரவேணுமைய்யா — வா முருகா வா
ஓம் முருகா ஓம் முருகா — ஓம் முருகா ஓம்
ஓம் முருகா ஓம் முருகா — ஓம் முருகா ஓம்

## ஸ்ரீ முத்துலிங்க சுவாமி சமாதி கொண்டது.

**வன்னத் தீனை மாலைத் தெள்ளியே என்ற வர்ண மெட்டு.**

1. கலையூட்டும் விளையாட்டுப் பிள்ளையே —எந்தன்
கலிதீர்த்து அமுதூட்டும் வள்ளியே —மனக்
களிகூர்ந்து மகிழ்வோடு துள்ளியே —யிரு
காலில் மிஞ்சிகள் பாதசரத்தொடு
பீலி மயிலடி மணிகள் கொஞ்சிட
கனிந்து நடந்து வரும் காட்சியே —எங்கோன்
கதிர்காம வடிவேலன் சாட்சியே

2. மலைவேடச் சிறுமி போல் பொறுமையாய் —ஒளிர்
மாணிக்கப் பேழையை அருமையாய் —சிந்தை
மகிழ்வோடு தூக்கியே பெருமையாய் —தென்றல்
மஞ்சுலா விடும் கங்கை மார்க்கமே
வஞ்சியானவள் மிஞ்சி பார்க்கவே
மாதவத்தோன் தொடர்ந்தோடவே —ஏழு
மலைமீது மயில் நின்று ஆடவே

## ஸ்ரீ கதிரை மலைச் சிந்து!

3. கந்தனும் வள்ளியும் கூடியே —அருள்
கதிர்காமச் சேத்திரம் நாடியே —அங்கு
கன வேகமாகவே ஓடியே —கோவில்
காத்து நிற்கிற காட்டு வேடுவன்
பக்கம் பேழையை வைத்துச் சித்திர
திரை மறைவிலிருவர் வாசமே —தேனும்
தினை மாவும் உண்டவர் நேசமே

4. செந்திலுறை வடிவேலனே —அழகு
சிங்கார வள்ளியின் லோலனே —பரா
சக்தி அருந்தவப் பாலனே —அன்னை
தேவயானை என் மீது கோபமாய்
ஏவுவாள் கணையாது வேகமாய்
தேவர்கோன கும்பிடும் அய்யனே —தூய
திருவுளங் கனிந்தருள் மெய்யனே

5. அன்பர் தொழுங்கதிர் காமனே —பசும்
அழகொளிர் திருமணி மார்பனே —படை
அறு வீட்டுக்கதிகாரனே —சதுர்
ஆடும் மாமயில் ஏறி வேலவன்
ஆசை நாயகி வள்ளி காவலன்
ஆனந்தத் தாண்டவம் ஆடவே —வானோர்
அரோகராவெனத் துதி பாடவே

6. மங்காத ஜெகஜோதியாகவே —முத்து
லிங்கரின் நல்லாத்மா ஏகவே —சிவ
சங்கரன் திருவருளாகவே —புகழ்
மாதவம் மிகும் பூதவுடலினை
மாட்சிமிகுந்திட நாட்டு மாந்தர்கள்
வைத்து வணங்கினர் பாருங்கோ —கந்தன்
வள்ளிக் கரோகரம் கூறுங்கோ

7. வல்வினை தீர்த்தருள் தாண்டவன் —நன்கு
வாழ்த்தி வரங் கொடுத் தாண்டவன் —வள்ளி
மயிலோடு விளையாடி நின்றவன் —பழனி
மலைக்கேகியே பதிகண்டதும்
நிலையாகிய கதிர் மாமலை
நிமிஷத்தில் நான் வருவேனடி —தேவ
நாயகி மன மகிழ்வாளடி

## ஸ்ரீ கதிரை மலைச் சிந்து!

8. குன்று தோராடிடும் குமரனே —கூவும்
குக்குடக் கொடிக் கதிகாரனே —அழகு
கோலமாமயி லேறும் வீரனே —யான்
கூறிடும் தமிழ் குவலயம் திகழ்
ஆர்வமுடனருள் அண்டமே புகழ்
குஞ்சர முகத்தவன் பாதமே -போற்றும்
கோவிந்தசாமியின் கீதமே

## கந்தன் வள்ளி தர்க்கம்

### கோலாட்டப் பாட்டு வர்ண மெட்டு.

1. அன்னமே மட மயிலே
அழகு வள்ளி மானே -உனை
ஆனந்தமாய் தானே -வெகு
அற்புதமாய் நானே -இந்த
அவனிமெச்சயிப்பதியிற் கடிமணஞ் செய்தேனே

2. வன்னமுயர் மாதரசே
வாழ் பழனி போரேன் -யிங்கு
மறுகிழமை வாரேன் -முத்து
மாலை வாங்கி தாரேன் -தோகை
மாமயிலின் மீதிலேறி வந்திடுவேன் பாரேன்

3. கணப் பொழுதும் உமைப் பிரிந்து
தனித்திருக்க மாட்டேன் -கன்னி
களித்திருக்க மாட்டேன் -போகச்
சம்மதிக்க மாட்டேன் -தாலி
கட்டினதும் பொய்யோ நான் தவறுசெய்தோ போட்டேன்

4. மணம் புரிந்த தெய்வானை
மயங்குகிருள் அங்கே -நீயும்
மயக்குகிருய் இங்கே -நான்
வாழ்வதினி எங்கே -நன்கு
மங்களமாய் வழியனுப்பு இருவருக்கும் பங்கே

## ஸ்ரீ கதிரை மலைச் சிந்து!

5. உம்மைப் போல் தந்திரியோ
ஒருவ ருலகிலில்லை -நல்
ஒழுக்க மென்ப தில்லை -ஒரு
உண்மையென்ப தில்லை -அங்கு
ஒரு மனைவியிருக்க யென்னை மணக்க ஞாயமில்லை

6. தன்னந் தனியே இருந்து
நவித்தயடி வள்ளி -மாத்
தந்தயடி தெள்ளி -மருந்
தனித்தயடி அள்ளி -தான்
தவறுதலாய் வாங்கியுண்டேன் தனை மறந்தேன் கள்ள

7. முன்னம் ஒரு வேடனைப் போல்
மானைத் தேடி வந்தீர் -பின்பு
வளையலோடு சென்றீர் -கூனக்
கிழவனாக நின்றீர் -முக
மூடியணிந்தெனை மயக்கி வசமாக்கிக் கொண்டீர்

8. கன்னக் கோலை வைத்துக்
களவெடுக்கும் குறச்சாதி -வெளிக்
காணலாங் வா நீதி -நீயோ
கர்வம் கொண்ட சாதி -உன்
கள்ளத்தனம் யானறிவேன் என்ன சொல்வேன் நீதி

9. என் குலத்தை நீரிகழ்ந்து
இயம்ப வேண்டாம் மிச்சம் -நான்
எடுத்துரைப்பேன் லச்சம் -சொல்ல
என்ன எனக் கச்சம் -உங்க
இழிவான குல நாற்றம் வெளியில் சொன்னால் வெட்கம்

10. வார்த்தை மெத்தப் பேசுகிறாய்
வனக் குறத்தி நீயே -புள்ளி
மானீன்ற சேயே -கொஞ்சம்
வாயை மூடு தாயே -எங்க
வம்மிசத்தை இகழ்ந்துரைத்து வாதாட வந்தாயே

11. ஆதி திரிசூலியுமை
ஆத்தாள் பரச்சாதி -உங்க
அப்பன் வலச்சாதி -உங்க
அம்மான் இடைச்சாதி -யிந்த
அண்டர்கோன் உம் மாமன் அசம்படியாச்சாதி

## ஸ்ரீ கதிரை மலைச் சிந்து!

12. சாதி குலம் பேசுகிறாய்
தருணமிதுவாமோ —வீண்
கர்வம் கொள்ளலாமோ —சும்மா
கலகம் செய்யலாமோ —நீயும்
சந்தோஷமாய் அனுப்பி வைக்க தடையும் சொல்லலாமோ

13. பழனி பழனி யென்று
பதறுகிறீர் அய்யா —அழகு
பன்னிரெண்டு கைய்யா —கேலி
பண்ண வேண்டாமய்யா —கதிரைப்
பதியை விட்டு அகலவிடேன் அரை நிமிஷம் மெய்யா

14. வைர வைடூரியங்கள்
வளமிகுந்த நாடு —நவ
மணிகொழிக்கும் நாடு —முத்து
மரகதக் கல்லோடு —யிதோ
மாணிக்க நதி சூழ்ந்து மருவி வரும் நாடு

15. அருள் பொழியும் கதிரைமலைப்
பதியெனக்குச் சொந்தம் —ஏழு
மலையெனக்குச் சொந்தம் —தவப்
பதியெனக்குச் சொந்தம் —இந்த
அவனி முதல் அண்டம் புகழ்மலை யெனக்குச் சொந்தம்

16. பால் மணக்கும் பழனிமலைப்
பதியெனக்குச் சொந்தம் —கழுகு
மலையெனக்குச் சொந்தம் —கதிரை
மலையெனக்குச் சொந்தம் —திருப்
பரங் கிரிசூழ் சுவாமிமலை சோலை மலை சொந்தம்

17. தேன் மணக்கும் செந்தி லொடு
எட்டிகுடி சொந்தம் —இதோ
ஏழுமலை சொந்தம் —ஈழத்
தருட் தலங்கள் சொந்தம் —நான்
தேடறிய நவமணியாள் தெய்வானைக்குச் சொந்தம்

18. நளினமுள்ள மாதரசே
நானுனக்குச் சொந்தம் —வள்ளி
நீ யெனக்குச் சொந்தம் —தேவ
யானைக்கும் நான் சொந்தம் —இந்த
நற்பதியில் ஆடும் மயில் வேலெனக்குச் சொந்தம்

# ஸ்ரீ கதிரை மலைச் சிந்து!

19. அகிலமெல்லாம் ஒளி வீசும்
ஆலயங்கள் சொந்தம் -சகல
ஆகமங்கள் சொந்தம் -தமிழ்
அட்சரங்கள் சொந்தம் -உலகில்
அன்னமிட்டோர் அறம்வளர்த்தோர் ஆகமிகச் சொந்தம்

20. ஆர்வமுடன் சிந்தெழுதி
அச்சிலிட்டோர் சொந்தம் -தமிழ்
அழகு மொழி சொந்தம் -கவி
மழை பொழிவோர் சொந்தம் -இதை
ஆக்கியோன் கோவிந்தசாமி யாவருக்கும் சொந்தம்

21. மாண்புயர் சேர் ''அண்ணமலை''
வளர் புது ஊர் கண்டு -அன்பன்
வாழ்மனைக்குச் சென்று -நன்கு
வாக்கருள்வேன் நின்று -ஜெய
மங்களமாய் பழனிக்கேகிப் பதி வருவேன் நன்று

22. போய் வருவீர் என்று சொல்லி
பூவடியைப் போற்றி -வள்ளி
பூவை மனந்தேற்றி -வாசப்
புதுமலர்கள் சாற்றி -அழகு
புனித வடிவேல் முருகன் புள்ளி மயிலேறி

23. குஞ்சரி வாழ் பழனிமலை
குமரனுமே சென்றார் -மணிக்
கோபுரத்துள் நின்றார் -தேவ
குஞ்சரியைக் கண்டார் -ஒரே
குதூகலமாய் யிருவருமே கதை கதைத்துக் கொண்டார்

24. கூடார வாசல் முன்னே
கோலமயிலாட -குமர
குருபரன் வேலாட -தேவ
குஞ்சரி நின்றாட -சேவற்
கொடியாகக் கதிரைமலைச் சிந்து தமிழ் பாட

25. அரிகூட வாசல் வழி
அழகு வடிவேலன் -அபி
ராமி தவப் பாலன் -வள்ளி
அம்மை மகிழ் லோலன் -கதிரை
அம்பதிக்கு வந்திட்டாராம் அன்பர்க்கனு கூலன்

# ஸ்ரீ கதிரை மலைச் சிந்து!

## திருவிளையாடல் சிந்து!

1. மாணிக்கக் கங்கையிலே வள்ளியம்மா
மஞ்சள் நீராடயிலே
ஆணிப்பொன் கோபுரத் தப்பனும் கூடவே
ஆடினர் கங்யையிலே

2. சந்தனப் பொய்கையிலே தெய்வானை
அம்மன் தலைமுழுகி
சிந்தை மகிழ்ந்தவள் கூடிக்குலவிடத்
தேடினள் வேலவனை

3. செந்தில் கழுகுமலை திருப்பரங்
குன்றம் பழனிமலை
கந்தமலை சுவாமி மேருகிரிமலை
காவிரி சூழ்மலையும்

4. எட்டிகுடி தணிகை சோலைமலை
மேலமலையினிலும்
செட்டிமகன் தங்கக் கட்டி முருகனைத்
தேடியும் காணமல்

5. சங்கத் தமிழ் வளர்த்த அகத்தியன்
சார்ந்த பொதிகைமலை
சத்திசிவன் வதி முத்திகைலைப்பதி
எத்திக்குந் தேடினளே

6. நாளும் புகழ் மணமே சித்தாண்டி
நல்லூர் திருமலையே
ஈழத்தருட் தலம் கீரிமலை கண்டு
ஏழுமலை குதித்தாள்

7. வந்தாள் கதிர்மலைக்கே வானுலகத்
தேவர்கள் கொண்டாட
சந்தக் குலவை முழக்கத்துடன் வந்த
சாதனை என்ன சொல்வேன்

8. புன்னகைத் தேன் பாய்ச்சி இருவரும்
பூங்கரத்தா லணைத்து
மின்னிடும் தேமலழகு கண்டானந்தம்
கொண்டு விளையாடி

# ஸ்ரீ கதிரை மலைச் சிந்து!

9. கொஞ்சி மகிழ்ந்திருக்க மதிதேவ
குஞ்சரி பார்த்தனளே
வஞ்சியைக் கண்டனள் வெஞ்சினங் கொண்டனள்
வந்தனள் நின்றனளே

10. கண்டால் கலிபறக்கும் கலியுகக்
கந்தன் மகத்துவமே
வண்டார் கடம்பணி தண்டாயுதக்குகன்
மயிலேறிக் கொண்டாரே

11. கொண்டை மயிர் பிடித்தாள் இழுத்தவள்
கோர்த்து உடல் பிணைத்தாள்
சண்டை தொடுத்தனள் வள்ளி தெய்வானையும்
சாதி குலம் பேசி

12. மான் வயிற்றில் பிறந்து காட்டு வன
வேடர் மனை வளர்ந்த
ஈனக்குறத்தியென் நாயகனுக்கு நீ
என்ன மருந்தளித்தாய்

13. கொச்சைக் குறத்தியென்று நீயுமெனைக்
கூசாம லேசுகிறாய்
அச்சம் மடம் நாணம் பண்பிலுயர்ந்த நான்
ஆர்ப்பாட்டம் செல்லாது

14. வீரமறத்தியடி என்னிடமுன்
வீராப்பு நில்லாது
மாராப்புச்சேலை வரிந்திருக்கிக் கட்டி
வள்ளி கரம் பிடித்தாள்

15. ஈரத்துயிலிருக்கி வரிந்தனள்
ஏதிந்தக் கோலமென்று
என்னடி பேசுகிறாய் தவ்விக் குதிக்கிறாய்
ஏதடி தெய்வானை

16. விண்ணவர் கோன் மகளும் நம்பிமகா
வேடுவன் சீர் மகளும்
தண்டை கலீர் கலீரென் றிலங்கிடச்
சாடிப் புரண்டனரே

17. கள்ளக் குமரகுரு தேசிகனார்
கண்டுளத்துள் சிரித்து
செல்லக் கஜமுக அண்ணனைத் தன் மனச்
சிந்தையிலெண்ணினரே

18. ஐந்து கரமிலங்க மகுடமுடி
ஆணிப் பொன் முத்திலங்க
சிந்தித்தவர்க் கருள் செய்திடும் சித்தி
விநாயகர் வந்தாரே

# ஸ்ரீ கதிரை மலைச் சிந்து!

## ஸ்ரீ விநாயகப் பெருமான் வள்ளி தெய்வானை இருவரையும் சமாதானம் செய்தருளியது.

## லாவணித் திருப்புகழ்

1. கைலாயக் கடவுளின் சுதனே! கருணாகர கணபதிமூர்த்தி
கலையூட்டும் அருட்பெருஞ் சோதியைப் பாடுங்க—மனக்
களிப்பூட்டும் மகிபனுக் கரோகரம் போடுங்க—ஜெய
கஜமுகன் திருவடி தொழுதிடப் பொருள் வரும்
கழலடி போற்றி நின்றிறைஞ்சிட அருள் தரும்
கதிர்காமக் கிரியினில் மேவிய ஜோதியே—கங்கை
கரையோரம் வந்து நின்றருளிய நீதியே

2. மயிலேறி முருகனும் நின்றார் குயில் பாடும் தமிழிசை கண்டார்
மகிழ்வோடு வடி தமிழ் பாடிச் சென்றாரே—புள்ளி
மானோடு கலைகளும் மருவிடக் கண்டாரே—முல்லை
மலர் மணம் கமழ்ந்திட வண்டுகள் மொய்த்ததன்
தேன் மதுவருந்தியே செழுந் தமிழோலிசையில்
தேமதுரச் சிந்துகவி பாடவே—வள்ளி
தெய்வானை யிருவரும் சண்டை போடவே

3. வள்ளிக்கும் தெய்வானைக்கும் வலுத்தது பெரிய சண்டை
உள்ளம் நெகிழ்ந்தோடிச் சென்றுபார்த்தாராம்-கணபதி
உண்மை நிலைதானறிந்து வேர்த்தாராம்—அங்கே
ஒருவர் தலை மயிரை ஒருவரிழுக்கக் கண்டு
இருவரை விலக்கியே கரிமுகக் கடவுளும்
இச்சா சத்தி கிரியா சத்தி ஆயிற்றே—நீங்கள்
எண்ணிய படியே மணம் தேறிற்றே

4. மங்கையே இருவர்களும் வம்மிசத்திலுயர்த்தி யென்று
ஐங்கரரும் சேதி செப்பத் தெரிந்தாளாம்—வள்ளி
அம்மனோடு தெய்வானையும் சிரித்தாளாம்—இங்கே
வாருங்க இருவரும் சேருங்கள் இத்ததி
கூறுங்க அரோகரம் பாருங்க குமரனை
குழந்தை வடிவேலன் வரும் காட்சியே—அழகு
கொஞ்ச வரும் குஞ்சரத்தான் சாட்சியே

5. சங்கர சதாசிவமே சரவண பவ குக முருகன்
தங்க மயிலேறிக் காட்சி தந்திட்டார்—இரு
மங்கையர் மதிமுகத்தைக் கொஞ்சிட்டார்—மயில்
தைத்ததிங்கிணத்தக தகத்ததிங்கிணத்தக
நாளாங்கு ததிங்கிண கிணத்ததிங்கிணத்தா
சதுர் நடனம் தோகை மயில் ஆடவே—மனச்
சஞ்சலங்கள் நீங்கிப் பறந்தோடவே

# ஸ்ரீ கதிரை மலைச் சிந்து!

## ஆனந்தக் கும்மி

1. திங்கள் மும்மாரி பொழிந்து வளம்—மிகும்
தென்கதிரை மலைச் க்ஷேத்திரமே
மங்கள மோங்கிடும் எங்கும் புகழ்ந்திடும்
மாணிக்கக் கங்கை மகத்துவமே

2. பொங்கிட ஆனந்தம் கொண்டனரே —உளம்
பூரிக்கத் தாண்டவம் ஆடினரே
கங்கையை நோக்கியே நால்வர்களேகிடும்
காட்சி மகத்துவம் பாருங்கடி

3. மாங்குயில் கூவுது தோப்புக்குள்ளே—பல
வண்டுகள் பாடுது சோலையிலே
பூங்குயில் வள்ளி தெய்வானையம்மா மதி
புன்னகை பூத்து நடந்தனரே

4. ஓம் என்ற அட்சரத்துள்ளிருந்து—அதோ
ஓச்காரச் சக்திஒலிக்குதங்கே
தேனமிர்த மொழி ஞானச் சுடரொளி
தீர்த்தமாடச் சென்றார் தோழிப் பெண்ணே

5. தெக்கத்திக் கைத்தறிச் சேலை கட்டி—வள்ளி
சிங்காரக் கொண்டை யவிழ்த்துதறி
மூக்குத்தி நத்துப் பில்லாக்கிலங்கிட
மூழ்கிக் குளிப்பதைப் பாருங்கடி

6. தங்கச்சரப்பளி முத்திலங்கத்—தனித்
தண்டட்டி பாம்படம் தான் ஜொலிக்க
நங்கை தெய்வானை மனமகிழ்ந்து நீரில்
நீந்திக் குளிப்பதைப் பாருங்கடி

7. தேவியர் இன்பம் தழைக்கக்குளிப்பதை
தீந்தமிழ்க் கந்தனும் பார்த்துக் கொண்டே
ஆவிபோல் நிற்கின்ற அண்ணனுடன் கூடி
ஆனந்தமாய் தீர்த்தம் ஆடினரே

8. வள்ளி தெய்வானை முருகன் கணபதி
வரிசையாய் நீராடும் காட்சி கண்டு
வானவர் தானவர் கோனவர் யாவரும்
வாரிச் சொரிந்தனர் மாமலரே

## ஸ்ரீ கதிரை மலைச் சிந்து!

9. ஊதும் குழலுடன் ஓதும் பக்தர் குரல்
ஓங்காரச் சத்தமும் கேட்டிடவே
மாது சிரோன்மணி வள்ளி தெய்வானையும்
மகிழ்ச்சியுடன் கரை ஏறினரே

10. எங்கும் ''அரோகரா'' சப்த எதிரொலி
எக்காளங் கண்டு ஒலித்திடவே
தங்கு தடையின்றி ஆடை திருத்தியே
சந்நிதி நோக்கி நடந்தனரே

11. மாதர்கள் கொஞ்சி நடந்திடக் கண்டந்த
மாண்புயர் வேலனும் ஐங்கரனும்
சோமன் இடையில் வரிந்து கட்டிமிகச்
சோபனமாய்ப் பின் தொடர்ந்தனரே

12. சீலக்கணபதி செல்வக் கதிர்மலை
சேத்திரம் சென்று அமர்ந்தாரே
பாலதண்டாயுதன் பார்வதி புத்திரன்
பாங்காக சந்நிதியுள் நுழைந்தார்

13. பம்பை முரசு தவில் முழங்க வந்த
பக்தர்கள் கூட்டம் அதிகரித்து
சங்கு தவழ்ந்திடும் மாணிக்கக் கங்கையில்
சந்தோஷம் கொண்டு தலை முழுகி

14. காருங் கதிர்மலை வாசகனே என்று
கற்பூரத் தீபம் கரம் ஏந்தி
கூறும் ''அரோகரம்'' விண்ணைப் பிளந்திட
குமரனும் கண்டு மனம் குளிர

15. காவடி ஆட்டம் ஒயிலாட்டம் அதை
கண்டாலே கண்கொள்ளாக் காட்சியடி
சேவடி நோக்கிக் கரும்புத் தொட்டில் கட்டி
செல்லும் அழகினைப் பாருங்கடி

16. ஆயிரத்தெட்டு அலகு குத்தி வெகு
அற்புதமாகவே தேரிழுக்க
ஆகாயக்காவடி ஆர்ப்பரிக்கக்கண்டு
ஆனந்த மொங்கும் பேரானந்தமே

17. ஆணிப்பொன் கோபுரத் துள்ளிருந்து நாளும்
அம்பலத்தாடும் அருள் முருகன்
ஆடும் மயிலேறி வள்ளி தெய்வானையும்
அன்பர்க் கருளும் பதியிதுவே

## ஸ்ரீ கதிர்மா மலைச் சிந்து!

18. வல்வினை தீர்த்து வரம் கொடுப்பார் பல
தொல்வினை போக்கிச் சுகம் தருவார்
நல்லருள் தந்தவன் உள்ளங்கவர்ந்தவன்
செல்லக் கதிர்மலை ஆண்டவனே

19. ஆடித் திருவிழா அப்பன் திருவடி
அன்புருகிச் சிந்து கண்டெழுதி
பாடியவன் குலம் ஊரென்ன பேரென்ன
பாங்கியரே சொல்லக் கேளுங்கடி

20. தெள்ளு தமிழ் கவி வாணர்கள் போற்றிடும்
தேசம் தென் பாண்டி வளநாடு
வெள்ளைக் குதிரைமேற் சாரி வரும் வெற்றி
வீர வெளியப்பன் காவலடி

21. செந்திருவோங்கும் குருக்கள் பட்டி உயர்
செல்வப் பெருங் குடியிற் பிறந்தோன்
பைந்தமிழ் பாவலர் நாவலர் சூழ்புவி
பாரில் இதற்கிணை யில்லையடி

22. மாதவம் சேர் திகழ் கொண்டையங் கோட்டை
மறவர் குலத்தில் உதித்த சிங்கம்
பூதலம் புகழ்சேர் வாழ்வீமத் தேவரின்
புத்திரன் சுப்பையா தேவர் சுதன்

23. கொஞ்சும் தமிழ் மொழியாம் சீரே அன்பன்
கோவிந்தசாமி யிவன் பேரே
மஞ்சு தவழ் கதிர் மாமலைச் சிந்தென
மாமணம் ஓங்கிடப் பாடிவைத்தான்

24. கோதைய ரெல்லாரும் வாருங்கடி கும்மி
கொட்டுங்கடி குமமி கொட்டுங்கடி
மேதினி மீதினில் நற்றமிழோங்கிட
வெற்றிக் குலவை முழக்குங்கடி

25. கோவிலும் வாழி குடி வாழி வெற்றி
குமர குருபரன் வேல் வாழி
சேவற் கொடியும் மிக வாழி வள்ளி
தெய்வானை மாமயில் வாழியவே

26. பைந்தமிழ் கற்றோர் குலம் வாழி சிந்து
பாடிடக் கேட்டோர் குடி வாழி
அம்புவி மாந்தர் மிக வாழி சுமன
அச்சகம் என்னாளும் வாழியவே

# ஸ்ரீ கதிரை மலைச் சிந்து!





## பொங்கும் மங்களம்! எங்கும் தங்குக!

ஒயிற் கும்மி வர்ண மெட்டு

**மங்களம்! மங்களமே சுப ஜெய**
**மங்களம்! மங்களமே** [மங்களம்]

**அனுபல்லவி**

1. திங்களணி சங்கரற்கு திரிலோக சுந்தரிக்கு
திருப்பதி மால் அயன் தேவ கணங்களுக்கு
ஐங்கர விநாயகர்க்கு அகிலம் நிறைந்தவற்கு
ஆறுமுகம் பன்னிருகை அழகு முருகனுக்கு
ஆறுபடை வீட்டினுக்குச் ஜெய மங்களம் தெய்வ
யானை வள்ளியம்மனுக்குச் சுப மங்களம் [மங்களம்]

2. சேவற் கொடியினுக்கு செங்கை வடிவேல் தனக்கு
சீர் நடனமாடி வரும் ஜோதி மயில் மூவருக்கு
தேவர்கள் முனிவர்கட்கு சித்தர் தவயோகிகட்கு
தேடிக் கதிரைமலை நாடி வரும் பக்தருக்கு
சித்திலங்கும் பொற்பதிக்கு ஜெய மங்களம் அருள்
முத்திலங்கும் நற்பதிக்கு சுப மங்களம் [மங்களம்]

3. மாணிக்கச் சித்தனுக்கும் மாதவத்தோர் யாவர்கட்கும்
மங்காத ஜோதிமயமான முத்துலிங்கருக்கும்
ஆணிப்பொன் பேழையினுள் அருள் வளர் தேவனுக்கும்
ஆகாயம் பூமி முதல் ஆண்ட குருநாதனுக்கும்
அண்டம் புகழ் கொண்டவற்கு ஜெய மங்களம் எங்கோன்
அருள்ஞான பண்டிதற்கு சுப மங்களம் [மங்களம்]

4. நாவலர்கள் பாவலர்கள் காவலர்கள் யாவருக்கும்
நற்றமிழ் வளர்த்த கவிவாணர் பெரியோர்களுக்கும்
தேவக் கதிரைமலை சிந்து பாடும் அன்பர்கட்கும்
செந்தமிழ் மணம் கமழக் கேட்ட பலபேர்களுக்கும்
ஜெகத்தோர்கள் யாவருக்கும் ஜெய மங்களம் நெஞ்சில்
பதித்தோர்க் கருளுமுண்டு சுப மங்களம் [மங்களம்]

**சுபம்! சுபம்! சுபம்!**

ஓம் முருகா

## பக்தர்களுக்கோர் அறிவித்தல்!

கதிர்காமக் கந்தன் சந்நிதியில் பக்தர்கள் வந்து தங்கிய மடங்கள் அகற்றப்பட்டு கதிர்காமம் (புனித நகரானது) எல்லோரும் அறிந்த உண்மை. அதே நேரத்தில் பலவருடகாலமாக பொன்னம்பலம்சாமி மடம் ஆற்றிவந்தசேவையையும் அன்பர்கள் மறக்கமாட்டார்கள். இப்பொழுது இம்மடம் ஏழுமலைக்குப் போகும். பழய பாதைக்கு அருகாமையில் தற்காலிகமாக அமைத்து மிகுந்த இடர்களுக்கிடையில் சேவையாற்றி வருகைதரும் அடியார்கட்கு அன்னதானமும் இயன்ற அளவில் வளங்கப்படுகின்றது. இம்மடம் ஆக்கபூர்வமான வகையில் கட்டிமுடிக்க முயற்சி எடுக்கப்பட்டு வருகிறது. கந்தன் கருணையால் இம்முயற்சி முற்றுப்பெற பக்தர்களின் இயன்ற பொருளுதவியை கீழ் கண்ட முகவரிக்கு அனுப்பவும். அன்றேல் நேரில் கொடுத்து பற்றுசீட்டைப் பெற்றுக்கொள்ளவும். சிறுதுளி பெரும் வெள்ளம், இது எமது தலையாய கடமையுங்கூட இம்மடத்தின் நன்மைக்காக இவ்விளம்பரத்தை பிரசுரிக்கின்றேன்.

கா. பெரியசாமி பிள்ளை, ஹிக்கொட—உந்துகொட.

நீங்கள் நன்கொடை செய்யவேண்டிய முகவரி:

பொ அய்யாத்துரைச்சாமி,
பொன்னம்பலம் சாமி மடம்,
பழய ஏழுமலை ரோட் சந்தி,
கதிர்காமம்.

---


## படித்து விட்டீர்களா.. .... !!

அழகான முருகன், வள்ளி, தெய்வானையுடன் காட்சி தரும் முகப்பு படத்துடன் கதிரைமலைச் சிந்து விலை ரூ. 2-00 மாரியம்மன் பாமாலை ரூபா. 1 – 25 ஆக்கியோன் (வி. எஸ். கோவிந்தசாமி தேவர்)

அழகிய முறையில் முருகன் மூவர்ண படத்துடன் கந்தக் கதம்பம் 25 புத்தகம் சேர்ந்தது ரூபா, 8 - 00

கதிர்காம மாலை சதம் 75, கணபதி—கந்தன் திருவிளையாடல் 75 சதம் ஆக்கியோன் (கா. பெரியசாமி பிள்ளை)

**ஸ்ரீ கந்தராஜா புத்தக நிலையம்,**
**ஹிக்கொட,**
**உந்துகொட.**




மில்க்வைற் மேலுறைகளின் பெறுமதி

1. பெரிய பொலித்தீன் பை

அல்லது

2. யோகாசனம் செய்முறை விளக்கப்படம் ஒன்றும், யோகாசன புத்தகம் ஒன்றும்
3. அழகிய துவாய் ஒன்று
4. அப்பியாச புத்தகம் ஒன்று

*நீல சோப் உறை 100 அல்லது, நீல சோப் உறை 10 அல்லது பார் சோப் உறை 10 அல்லது மெடிகேட்டட் உறை 10 அல்லது சலவைப் பவுடர் உறை 10*

*நீல சோப் உறை 500 அல்லது பார் சோப் உறை 50*

*நீல சோப் உறை 100 அல்லது பார் சோப் உறை 10*

## வியாபாரிகளுக்கு விசேட பரிசு-

*72 சவர்க்காரஞ் சுற்றி வரும் உறை 50 அல்லது 36 சவர்க்காரஞ் சுற்றி வரும் உறை 100 அல்லது 45 சதம் சோப் சுற்றி வரும் உறை 50 அனுப்பித்* **துவாய் ஒன்று பெற்றுக்கொள்ளவும்.**

**மில்க்வைற் சவர்க்காரத் தொழிலகம்,**

**த. பெ. எண். 77 - யாழ்ப்பாணம்.**